

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.2.2025) தலைமைச் செயலகத்தில், சிவகிரி மடம் மற்றும் சிவகிரி ஆசிரமம் சார்பில் இங்கிலாந்து நாட்டின் மே 2 முதல் 4 வரை நடைபெறவுள்ள "ஸ்ரீ நாராயண குரு நல்லிணக்கம் 2025' (Sree Narayana Guru Harmony 2025) நிகழ்ச்சிக்கான இலச்சினையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, சிவகிரி மடத்தின் சர்வதேச அமைப்புச் செயலாளர் சுவாமி வீரேஸ்வரானந்தா, இங்கிலாந்து நாட்டின் சிவகிரி ஆசிரமத்தின் தலைவர் பைஜு பாலக்கல், செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் சதீஷ் குமார், ஒருங்கிணைப்பாளர் கணேசன் சிவன், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

### பேரறிஞர் அண்ணா 56-வது நினைவு நாள்!

### முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# நாளை (பிப்-3) அமைதிப் பேரணி!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு – சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு மற்றும் கழக முன்னணியினர் நாளை (பிப்ரவரி - 3, திங்கட்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நாள் : 31.01.2025** **சென்னை மாவட்ட தி.மு.க.**

### ஒன்றிய அரசு சமர்ப்பித்த பொருளாதார ஆய்வறிக்கையில்

# 44 முறை இடம் பெற்ற 'தமிழ்நாட்டின்' பெயர்!

## கழக அரசின் திட்டங்கள் – சாதனைகளை அடுக்கடுக்காகப் பட்டியலிட்ட ஆய்வறிக்கை!

புதுடெல்லி, பிப். 2-

நேற்று முன்தினம் தாக்கலான பொருளாதார ஆய்வறிக்கையில், தமிழகத்தின் பெயர் 44 முறை இடம்பெற்றுள் ளது. தொழிற்சாலை, தனிநபர் சராசரி, சிறு,குறு, நடுத்தர தொழில்கள், விவசாயம், சேவை, திறன் வளர்ப்பு கல்வி, முதலீட்டாளர்களுக்கு ஆதரவு ஆகியவற்றில் தமிழ்நாடு எவ்வாறு முன்னிலை வகிக்கிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின்காலணி, பாரம்பரிய தோல் துறையில் தமிழகம் 38 சதவீத பங்கு 04 தமிழகத்துக்கு அங்கீகாரம் வகிக்கும் நிலையில், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டு உள்ளது. நாட்டின் தோல் பொருள் ஏற்றுமதியில், தமிழகம் 47 சதவீத பங்கு வகிக்கிறது எனவும், தைவானின் பெங் டே உட்பட அன்னிய முதலீடுகள், உலக காலணி தயாரிப்பு நிறுவனங்களை ஈர்க்க அரசு எடுத்துள்ள முயற்சிகள் போன்றவையும் பட்டியலிடப்பட்டு உள்ளன. வருங் காலத்தில் காலணி தொழில் முதலீடுக்கான மாவட்டங்களாக மதுரை, சிவகங்கை ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் வாயிலாக, உற்பத்தியாளர்க ளுக்கு தேவையான நிலம் கிடைப் பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கெய்டன்ஸ் எனப்படும் தமிழக அரசின் முதலீடு மேம்பாட்டு ஏஜென்சி, பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரு வதாகவும், மாண்டரின், ஜப்பான், கொரிய மொழிகளில் விளம்பரங் களை தயாரித்து வெளியிடுவதாகவும்; தற்போது ஜெர்மன், பிரெஞ்ச் மொழிகளிலும் விளம்பர தயாரிப்பு நடைபெறுவதாகவும் கூறப்பட்டு உள்ளது.

முதலீட்டாளர்களுக்கு பிரத்யேக அதிகாரி நியமிக்கப்பட்டு, தொழில் துவங்க வழிகாட்டப்படுவதால், உற்பத்தி ஆலை துவங்க ஆதரவான மாநிலமாக தமிழகம் இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### பேரறிஞர் அண்ணா நினைவு நாள்: நாளை

# சிவகங்கை மாவட்டம் முழுவதும் அமைதிப் பேரணி!

## திருப்பத்தூரில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. பிப்.2-

நாளை 3ம்தேதி பேரறிஞர் அண்ணா வின் 56வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் முழுவதும் அமைதிப்பேரணி நடைபெறுகிறது.

இதுகுறித்து கூட்டுறவுத் துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கேஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

காஞ்சி மாநகர் தந்த காவியத்தலைவர் , உலகத்தமிழர்கள் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர், தமிழ் மொழிக்காகவும், தமிழர்கள் மேம்பாட்டுக்காகவும் அல்லும் பகலும் அயராது பணியாற்றி ஓயாது பாடு பட்ட உத்தமதலைவர், , கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது ஆண்டு நினைவு நாள் நாளை 3ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஆகிய கட்சி கொள்கையினை வெளியிட்டும் அந்தக் கொள்கையின் வழியில் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் நினைவு நாள் நாளை 3ம்தேதி அனுசரிக் கப்படுகிறது.

நாளை காலை சிவ கங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை, சிவ கங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, சிங்கம்புணரி. ஆகிய ஊர்களில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்து. மரியாதை செலுத்தப்படுகிறது. மற்ற இடங்களில் ஒன்றிய ,நகர, பேரு ர் கழக செயலாளர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவப்படத்தினை மலர் மாலை களால் அலங்கரித்து மலர்தூவி அவரது புகழினை போற்றும் வகையில் நினைவஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், அந்தந்த பகுதி ஒன்றிய, நகர , பேரூர் கழகச் செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன்விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். நாளை காலை 9.00 மணியளவில் திருப்பத்தூரில் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலிருந்து அமைதிப்பேரணி துவங்கி மதுரை சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை! காரைக்குடியில்

# மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அழகையா மகள் திருமணம்!

## நாளை நடைபெறுகிறது!

சிவகங்கை, பிப்.2-

சிவகங்கை மாவட்ட கழக இலக்கிய அணி துணை அமைப்பாளர் தேவகோட்டை கா .அழகையா. அ.ஜனனி ஆகியோர் மகள் அ.சொர்ண முகி என்ற அபர்ணாவிற்கும் சூரம்புலி அ.பெரியண்ணன் திருமதி அமுதா ஆகியோரது மகன் பி .கார்மேகம் என்ற மணிமாறன் ஆகியோரது திருமணம் நாளை (3ஆம் தேதி திங்கட்கிழமை) காலை 9.30 மணிக்குமேல்10.30 மணிக்குள் காரைக்குடி சுபலட்சுமி மஹாலில் கூட்டுறவுத் துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மாவட்ட கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. இந்த திருமணத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர பேருர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு ,பொதுக்குழு உறுப்பினர்கள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள். மணவிழா ஏற்பாடுகளை கா.அழகையா,அ.ஜனனி வே. தங்கவேலு,திருமதி அஞ்சனாதேவி கா.அண்ணாதுரை, கா.இளங்கோவன் ஆகியோர் செய்து வருகிறார்கள்.



கோவில்பட்டி வ.உ.சி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா மற்றும் ஆண்டு விழாவில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான திருமதி பெ.கீதாஜீவன் கலந்து கொண்டு உரையாற்றி மரக்கன்றுகள் நட்டு வைத்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) பிரபாகரன்,பள்ளி தலைமை ஆசிரியர் சேகர் மற்றும் கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி,கோவில்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' திட்டம்!

# அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கருத்துக் கேட்க வேண்டும்!

## நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் – தி.மு.க. சார்பில் பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, பிப். 2-

ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளிடமும் தனித்தனியாக கருத்துக் கேட்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது. உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதிகளிடம் ஒன்றிய அரசு ஆலோசனை நடத்த வேண்டும் என்றும் நாடாளுமன்ற கூட்டுக்குழுவிடம் திமுக வலியுறுத்தியுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு மாநிலங்களவை திமுக உறுப்பினர் பி.வில்சன் கடிதம் எழுதியுள்ளார். அதில், ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்த நாடாளுமன்ற குழுவின் விவாதங்களில் வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய விவாதங்கள் நடைபெற வலியுறுத்தி கடந்த மாதம் 3 ஆம் தேதி ஏற்கனவே எழுதிய கடிதத்தை அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.



ஒன்றிய அரசின் ஒரே நாடு, ஒரே தேர்தல் மூலம், ஜனநாயகம், கூட்டாட்சி அமைப்பு ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார். எனவே, ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக அனைத்து தரப்பினரிடமும் விவாதம் நடத்த வேண்டும் என்றும் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

அதன்படி, அங்கீகரிக்கப் பட்ட மற்றும் அங்கீகரிக் கப்படாத கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்றும், அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்துக்களை தனித்தனியாக கேட்க வேண்டும் என்றும் வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

ஒரே நாடு, ஒரே தேர்தலால், கூட்டாட்சி கொள்கைகள் நிலைநிறுத்தப்படுவதையும், மாநிலங்கள் எதிர்கொள்ள உள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணுவது குறித்து மாநில கட்சிகளிடம் ஒன்றிய அரசு கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று பி.வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்துவது குறித்த குழுவின் பணி விதிமுறைகள், விவாதங்கள் மற்றும் பரிந்துரைகளை பொதுவெளியில் தெரியப்படுத்த வேண்டும், ஒன்றிய அரசு முன்மொழிந்த திருத்தங்களின் செயல்பாட்டு சாத்தியக்கூறுகள் மற்றும் தேர்தல் மேலாண்மையில் அவற்றின் தாக்கங்கள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் 2 தேர்தல் ஆணையர்களின் கருத்துக்களை அறிய வேண்டும் என்று வில்சன் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, ஒன்றிய நிதித்துறைச் செயலாளர் மற்றும் தேர்தல் நடைமுறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஓய்வுபெற்ற தலைமைத் தேர்தல் ஆணையர்களின் அனுபவங்களைப் பெறவேண்டும் என்றும் பி.வில்சன் தெரிவித்துள்ளார்.

மேலும், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் ஓய்வுபெற்ற நீதிபதிகள், அனைத்து மாநிலங்களின் காவல்துறை இயக்குநர்கள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கறிஞர் சங்கங்கள், அரசியலமைப்பு நிபுணர்கள், தேர்தல் சட்ட நிபுணர்கள் உள்ளிட்ட 12 தரப்பினரிடம் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான நடைமுறை சிக்கல்கள் குறித்து விவாதிக்கவேண்டும் என்றும் நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மாநிலங்களவை தி.மு.க. உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.

### அண்ணா நினைவு நாள்: வாடிப்பட்டியில்

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, பிப். 2-

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற மூன்றாம் தேதி வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணி நடத்தி அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர் - வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்தவர், எல்லோராலும் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்படுபவர், தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் பெரும் தொண்டாற்றியவருமான அறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (03.02.2025 திங்கள்கிழமை) மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டி பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடும் நிகழ்வு காலை 10 மணி அளவில் நடைபெற உள்ளது. முன்னதாக வாடிப்பட்டி மதுரை மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகம் முன்பாக இருந்து அமைதி பேரணி புறப்பட உள்ளது எனவே இந் நிகழ்வுகளில் மதுரை வடக்கு மாவட்ட திமுகவுக்குட்பட்ட மாவட்டக் கழக, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.



இவ்வாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலமாக கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையத்தில் ரூபாய் 16 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் கட்டண கழிப்பறை சீரமைக்கப்பட்டு பணிகள் நிறைவு பெற்ற நிலையில் அதனை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்வில் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, ரகுராமன், தி.ரோஸிட்டா, மாநகராட்சி அதிகாரிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.